[1987 ஏப்ரல் 2]

(பேரவைத் துணைத் தலைவர்)

திரு. மு இராசாங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

திரு. கோ. வீரய்யன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,95,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது. நாளை (3-4-1987) காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-19 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

60. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 27-1-1987 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1 1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

61 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தாரால் விற்பனை செய்யப்பட்ட அரசு கல்நார் சிமெண்ட் அழுத்தக் குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளுக்கு விதிக்கக் கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 4-12-1986 ஆம் நாளிட்ட 1240-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)53(5) பிரிவின் கீழ் பேரவை முன வைக்கப் பெற்றது].

62. இமாச்சல பிரதேச தோட்ட விளைபொருள் விற்பனை மற்றும் தனிடும் நிறுவனத்தில் விற்பனை மையங்களில் செறிவு குறைக்கப்பட்டு பானமாக விற்கப்படும் ஆப்பிள் சாறிற்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 18—2–1986 ஆம் நாளிட்ட 1296 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

94. கோரிக்கை எண், 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ் ஆங்கிலம்)

95. வேளாண்மைத்துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1987-88 (தமிழ், ஆங்கிலம்)

96. கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987—88 (தமிழ், ஆங்கிலம்)

97. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் பற்றிய ஆய்வுரை, 1986—87 (தமிழ், ஆங்கிலம்)

98. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் பற்றிய ஆய்வுரை, 1986—87 (தமிழ், ஆங்கிலம்)

99. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை, 1986-87 (தமிழ், ஆங்கிலம்)

100. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் வணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை, 1986-87, (தமிழ், ஆங்கிலம்)

101. 'சென்னை குடிநீர்' என்கிற புத்தகம்—1987 (தமிழ்)

102. சட்டவிதிகள் ஆய்வுக்குழுவின் நான்காவது அறிக்கை எட்டாவது சட்டமன்றப் பேரவை). (ஆங்கிலம்)

103. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976—77 ஆம் ஆண்டிற்கான அறிக்கை மீது (வருவாய் வரவினங்கள்) பொதுக் கணக்குக் குழு (1980-82) அளித்த பன்னிரெண்டாவது அறிக்கைகளில் (ஏழாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை.